

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (21.07.2023) திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் தணிகை இல்ல வளாகத்தில் ரூ.99 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ள குடில்களை திறந்து வைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வி. முரளீதரன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் முனைவர் ஆல்பி ஜான் வர்கீஸ்., கூடுதல் ஆணையர் திருமதி ந. திருமகள், அறங்காவலர் குழு தலைவர் சு.ஸ்ரீதரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

‘இனி பாதுகாப்பாக வாழமுடியுமா?’ என்று அச்ச உணர்வை பெண்கள் மனதில் மணிப்பூர் கொடூரங்கள் விதைத்திருக்கின்றன!

# தேசிய மகளிர் ஆணையம் - உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்திடுவீர்!

## சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் அறிக்கை!

சென்னை, ஜூலை 22-

“அத்தனைப் பெண்களின் நெஞ்சிலும், ‘இனி பாதுகாப்பாக வாழ முடியுமா?’ என்ற அச்ச உணர்வை விதைத்திருக்கின்றன, மணிப்பூர் கொடூர நிகழ்வுகள்” என்றும் தேசிய மகளிர் ஆணையம் என்ன செய்கிறது? ‘பெண்கள் பாதுகாப்பு’ என்று கிளிசரின் கண்ணீர் வடித்தவர் எங்கே?” என்றும் சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

இதயம் உள்ள எவராக இருந்தாலும் மணிப்பூர் பெண்களுக்கு நிகழ்ந்த கொடூரத்தை வெளிப்படுத்திய வீடியோ காட்சிகளைத் தொடர்ந்து பார்க்க முடியாது. அந்தளவுக்கு நெஞ்சத்தை உலுக்கி எடுக்கிறது. ஒரு பெண்ணாக, இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயலைக் கண்டு பதறுகிறேன். வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மணிப்பூரில் வாழும் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி, மதவெறியைத் தூண்டி, மாநிலத்தை கலவரக் காடாக்கி, ரத்த ஆறு ஓடும்படி செய்திருக்கின்றன மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசும், ஒன்றிய பா.ஜ.க அரசும்!

மூன்று மாதங்களாக



மணிப்பூரில் கலவரம் பற்றி எரியும் நிலையில், நாட்டின் பிரதமர் அந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. உண்மை நிலவரம், எத்தனை கொடூரமாக இருக்கிறது என்பதைத் தொடர்ந்து வெளியாகும் வீடியோ காட்சிகள் வெளிப்படுத்தி வரும் நிலையில், குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்று நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கும் நாளில் செய்தியாளர்களிடம் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

*Better late than never* என்பது போல இனியாவது உண்மைக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இதுகுறித்து பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் அனுமதி மறுக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இந்நிலையில், பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவரின் தலை துண்டிக்கப்பட்டு, நட்டு வைக்கப்பட்டிருக்கும் கொடூரமும் வெளிப்பட்டுள்ளது.

இத்தகைய கொடூரங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து, மணிப்பூர் மாநில பா.ஜ.க. முதலமைச்சரிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, இது போல பல நிகழ்வுகள் நடந்துள்ளன. எத்தனை வழக்குகள் பதிவு செய்வது என்று மனிதாபிமானமற்ற முறையில் அலட்சியத்துடன் பதிலளித்திருக்கிறார். பெண்களுக்கு முற்றிலும் பாதுகாப்பு இல்லாத சூழல் மணிப்பூரில் நிலவுகிறது. இதுபோன்ற கொடூர நிகழ்வுகளில் பெண்களின் நம்பிக்கையும் பாதுகாப்பும், தேசிய மகளிர் ஆணையம் தான். மேடைகளில் பேசுபவர்கள், ஊடகங்களில் விவாதிப்பவர்கள், சமூக வலைத்தளங்களில் பதிவிடுவோர் உள்ளிட்டோர் பொதுவான முறையில் பெண்களைக் குறித்துப் பேசினாலும், தனிப்பட்ட முறையில் விமர்சித்தாலும் உடனடியாக, தானாக முன்வந்து அதனை விசாரிக்கிறது தேசிய மகளிர் ஆணையம். இதுவும் அதன் கடமைதான்.

பேசுவதற்கே இத்தனை கடமையுணர்ச்சியுடனான செயல்பாடு என்றால், மணிப்பூரில் மாதக்கணக்கில் பெண்கள் மீது நடத்தப்படும் கொடூரப் பாலியல் தாக்குதல் மீதான நடவடிக்கை என்ன? இத்தனை நாளாக கண்டும் காணாதுததுமாக இருந்தது ஏன்?

தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் என்ற பொறுப்பில் இருந்துகொண்டு, பெண்கள் பாதுகாப்பு என்று கிளிசரின் கண்ணீர் வடித்தவர் எங்கே போனார்? பா.ஜ.க.விலும் மகளிர் பிரிவு இருக்கிறது. அதன் தேசிய அளவிலான தலைவராக இருக்கக்கூடியவர் என்ன செய்து கொண்டிருந்தார்?

நாட்டில் வாழும் அத்தனைப் பெண்களின் நெஞ்சிலும், தங்களால் இனி பாதுகாப்பாக வாழ முடியுமா என்ற அச்ச உணர்வை விதைத்திருக்கின்றன மணிப்பூர் கொடூர நிகழ்வுகள். ஒட்டுமொத்த இந்தியப் பெண்களின் நலனைக் கருதியும், மணிப்பூர் மாநிலப் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் தேசிய மகளிர் ஆணையம் தன் கண்களைத் திறந்து பார்த்து, கடமையை விரைந்து மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன், தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! கூ.பீ.ஜெயின் எம்.சி தலைமை !

# கலைஞர் நூற்றாண்டு விழா : வில்லிவாக்கம் மேற்கில் வாழ்த்தரங்கம்!

## நடிகர் ராஜேஷ் - கவிஞர் பா.விஜய் - தயாநிதிமாறன் எம்.பி. - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ சிறப்புரை!

சென்னை, ஜூலை. 22-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் “என்றென்றும் பராசக்தி நம் கலைஞர் தமிழ் சக்தி” எனும் தலைப்பில் வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (22.7.2023 - சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், 8 வது மண்டலக்குழு தலைவருமான கூ.பீ. ஜெயின் தலைமை வகிக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் நடிகர் ராஜேஷ், கவிஞரும், நடிகருமான பா.விஜய் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி. செம்மொழி, சுதா தீனதயாளன், வானவில் விஜய், சி.மகேஷ்குமார், லதா வாசு, எல்.பி.எப்.ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, கலைச்செல்வி மனோகரன், ஐ.சி.எப். மு.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், பா. ஜானி, சொ.முருகேசன், ப. லோகுபாபு, ஜெ.தங்க ராஜ், ஆர்.கோபாலகிருஷ்ணன், மா.கபிலன் கோ.மணிவேந்தன், பா.தே. தீனதயாளன், கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே. பி.தீபக் குமார், மா.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ பி. சுரேஷ்பாபு, பூ.சத்தி யேந்திரன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி,கே.சந்துரு, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதி இளம் சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், சொ.வேலு, சரிதா மகேஷ்குமார், பா.ஸ்ரீரா முலு, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ. நாகராஜ், செ.தமிழ்வேந்தன் எம்.சாமிக்கண்ணு, எஸ். முரளி, எஸ்.ராஜசேகர், வி.சுதாகர், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், ரமேஷ்(எ)நீல கண்டன், பி.உதயசங்கர், எம். இப்ராஹீம் கனி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, எ.நிர்மலா தேவி, இரா.கலைச்செல்வி, டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன், பி.ஜெகதீஷ், க.வினோத், நா.துலுக்காணம், எல்.பி.எப். மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், எம். பெரோஸ்கான், ம. அசோக்குமார், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி.வி.நாகவல்லி, ச.காளிதாசன், க. பா.பிரதீப்குமார், கு.கிரிஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், பிரச்சன்ன வேலன், பா.சுந்தர், மு.முனுசாமி தாஸ், புரசை டி.சம்பத் , டி.தாமோதரன், டபிள்யு.அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச. மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

வட்டச் செயலாளர்கள் ஆர்.தீனதயாளன், மா.அகிலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில்

# மதுரவாயல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞரின் சிலப்பதிகார நாடகம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜூலை. 22-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு காவியக் கண்ணகியைக் காத்த பெருந்தகை கலைஞரின் சிலப்பதிகார நாடகம் இன்று (22.7.2023 - சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் இராமாபுரம் மவுண்ட் பூந்தமல்லி சாலை ஜீவன் ஜோதி மஹாலில் நடைபெறுகிறது.

மதுரவாயல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

வடக்குப் பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, ஆலப்பாக்கம் கு.சண்முகம் எம்.சி, ஊராட்சி மன்றத் தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி, வ.செல்வகுமார் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.ராஜேஷ், பி.எம்.செல்வராஜ், வே. மதியழகன், இரா. பால்பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி, எஸ்.பாலமுருகன், எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ் ஆகியோர் வரவேற்புரை ஆற்று கின்றனர்.

பேராசிரியர் முனைவர் கி.பார்த்திபராஜா குழுவினர் வழங்கும் கலைஞரின் சிலப்பதிகார நாடகத்தினை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் லயன் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ் குமார், க.தனசேகரன் எம்.சி, காசிமுத்துமாணிக்கம், எஸ். பத்மபிரியா, பால வாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு. மனோகரன், பா.வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன் எம்.சி, கே.கண்ணன் எம்.சி, மு.ராஜா எம்.சி, எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, இரா.துரைராஜ் எம்.சி, எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ.மதியழகன் எம்.சி, துரைகபிலன், அரிமா சு.சேகர், ஜி.வெங்கடேசன்,

வீர.கனிமொழி, சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ரீதரன் எம்.சி, எம்.கே.ஏழுமலை, ப. ரவி, உ.துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ. அரிகிருஷ்ணன், எஸ்.டி.தங்கராஜன், ரா.பாலசுந்தரம், ப.கிரிஜா, பி.எஸ்.முருகேசன், எஸ்.டி. தங்கராஜ், தா.பஷீர், டி,ஜே. பாஸ்கர், லயன் எஸ்.மணி, கே.குமரேசன், வே.ஆனந்தன், ஏ.கே.ஆனந்த், எஸ்.தீபக், எம். விநாயகமூர்த்தி, சைதை சாதிக், கழக த.ரமேஷ், வழக்கறிஞர் த.பாபு, பா.அருண்குமார், ரத்னாலோகேஸ்வரன், சி. பரிமேலழகர், சி.சுரேஷ், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், ஜி.வரதன், மருத்துவர் மஞ்சுளாதேவி, ச.சங்கர் கணேஷ் எம்.சி, செ.ரவி, செல்வி ரமேஷ் எம்.சி, ஹேமலதா கணபதி எம்.சி, சாந்தி இராமலிங்கம் எம்.சி, ஆ. மாலினி எம்.சி, எம்.இ.ஸ்டாலின் எம்.சி, கே.வி.திலகர் எம்.சி, ரமணி மாதவன் எம்.சி,

தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரி சங்கர், என்.ரவி, கே.எஸ். மாறன்குமார், கே.சங்கர், கு.சதீஷ்குமார், இரா. வினோத், ஜெயசுதா, எஸ்.பி. அருள், எம்.ஜி.சாமிநாதன், எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி. அண்ணாதாசன், எம்.எம். ஜெயரத்தினம், சி.சசி குமார், ப.ஆலன், எம்.ரூபன், மூன் லைட் டி.ரவி மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொள்கிறார்கள்.

கே.ராஜி எம்.சி, 155 வது வட்டச் செயலாளர் ஆ.ராதா செல்வம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# ஓ... குக்கித் தாய்மாரே!



கொத்துக் கொத்தாய்
மலையிறங்கிவரும்
நச்சரவங்கள் போல்தான்
அந்த வீடியோவில்
மணிப்பூர் நபும்சகர்கள்
ஆவேசமாய்
வந்து கொண்டிருந்தார்கள்...
இரண்டு
அப்பாவி முயல்களை
விரட்டியபடி !


★★★

மானமழிய
மனமழிய
மருண்ட விழி சோர
முடிவற்ற பாதையினூடே
தட்டுத் தள்ளாடி வந்த
பெண்மையைக் காணக் காண
நெஞ்சொிந்து எரிந்து
ஆலகால நீலமாகியது.

★★★

ஏ...
மலைசாதியே என்று
மலிந்து பேசிய மைத்தேயிகளே...
நீங்கள்
மனித சாதியே இல்லையென்று
உலகரங்கம் இன்று
தீர்ப்பளித்துவிட்டதே !

★★★



நாணப் போகிறீர்களா ?
இல்லை
நாண்டு கொண்டு
சாகப் போகிறீர்களா ?

★★★

தாயை தங்கையை
ஈரக்குலை நடுங்க
ஈனரக்கரென
அடித்திழுத்து வந்தவரெல்லாம்
சோறுண்ணும் ஜென்மங்கள்தானா ?
உங்களுக்கு,
ஆதார் கார்டும் ஒரு கேடா ?

***

புயலிடைச் சிக்கிய
இள வாழையென,
‘ஐயோ’ என, ‘அம்மே’ என
விதிவிட்டபடி வீதிவழி வந்த
நாரியரிருவரும்
பாரத மாதாவின்
மகள்களில்லையா ?

★★★

நாய்கள் செய்யுமோ
இந்த நாராசத்தை?
பேய்களும்தான் செய்யுமோ
இந்தப்
பெரும் பாதகத்தை?

★★★

அறுநூறுக்கும் மேலான
உயிர்களையும் குற்றுயிர்களையும்
உள்ளிறக்கிய பின்னும்
கோரக் குடலின்னும் நிரம்பலையோ ?

★★★

1939 ல் வெடித்த
‘நூபி லான்’ எனும்
பெண்களின் போர்
மீண்டுமிங்கே
வெடித்தெழ வேண்டுமோ ?

★★★

அன்றொரு நாள்
வியட்நாம் மண்ணில்
அறியாத பிள்ளை ஒன்று
அம்மணமாய் வந்ததற்கே
ஆவி பதறிப் போன
நாகரீக உலகம்
இன்று
சம்மட்டியால் அடித்ததுபோல்
சாய்ந்து கிடக்கிறதே !

★★★

ஏ...
கருப்பு இதயம் படைத்த
மணிப்பூர் மூடர்களே...
உங்களை
கண்ணகி பிறந்த மண்
காறித் துப்புகிறது.

★★★

மே நான்கில் நடந்த
பாதகச் செயலுக்கு
ஜூலையில் மாரடிக்கும்
ஆட்சியாளர்களை எண்ணி
நாகரீக உலகம்
‘ச்ச்சீச்சீ’ கொட்டிப் பழிக்கிறது.

★★★

மூட சனங்கள்
மைத்தேயி என்றும்
குக்கி என்றும் பிரிந்து நிற்க...
மாதக்கணக்கில்
மானுடம் நசுங்கிய போதும்
நீரோ மன்னனாய்
பாராமுகம் காட்டிய
ஆட்சியாளர்களை நம்பி
இனிப் பலனில்லை.

★★★

நீதிமன்றமே தலையிடுக !
கறந்த இடத்தையும்
பிறந்த இடத்தையும்
ஊர் பார்க்க இழுத்து வந்து
இந்தியப் பெண்மையை
இடுகாட்டிலிட்ட அந்த
உன்மத்த நாய்மகன்களை
சட்டத்தின் வழியே ஆழ சபித்திடுக !


★★★

ஜனநாயகத்துக்கு
ஆயிரம் புறவாசல்கள்.
போகட்டும்.
எங்கள் அன்னையாின்
ஜனனேந்திரிய மானத்தை
இனியேனும் காத்திடுக !

★★★


ஓ... குக்கித் தாய்மாரே !
வெட்கித்
தலைதாழ வேண்டியது
நீங்களல்ல !
உங்கள் கற்பறத்தை
காட்டு நாய்களால்
களவாடிவிட முடியாது !

★★★




ஓ...
மணிப்பூர் மாதரசிகளே !
பிறப்பொக்கும்
எல்லா உயிர்க்கும்
என்றோதிய
வள்ளுவன் பிறந்த
மண்ணுமக்கு
என்றும் துணையிருக்கும் !
முன்னிலும் மிடுக்கொடு
எழுக !
பொலிக !

★★★



**ஸ்ரீராம் சர்மா**
எழுத்தாளர்–இயக்குநர்